# டிசம்பர் – 12 – செவ்வாய்

## தூய குவாட்டலுப் அன்னை

**வானதூதர் மரியாவுக்குத் தோன்றி,' அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்றார். லூக். 1:28**

## முதல் வாசகம்: செக்கரியா1:14–17 (வாசகம் மாறுபடலாம்)

ஆகவே, என்னோடு பேசிக் கொண்டிருந்த தூதர் என்னை நோக்கி, "நீ உரக்கக் கூவி அறிவிக்க வேண்டியது. படைகளின் ஆண்டவர் கூறுவது இதுவே. நான் எருசலேம்மீதும் சீயோன்மீதும் பெரிதும் அக்கறை கொண்டுள்ளேன். ஆனால் அமைதியுடன் இனிது வாழ்கின்ற வேற்றினத்தார்மேல் கடும் சினம் கொண்டுள்ளேன். நான் சிறிதே சினமுற்றிருந்தபோது அவர்கள் பெரிதும் தீவினை செய்தார்கள். ஆதலால் இரக்கத்துடன் எருசலேமுக்குத் திரும்பி வருகிறேன், "என்கிறார் ஆண்டவர். "அங்கே என் இல்லம் கட்டப்படும் எருசலேமின்மேல் அளவு நூல் பிடிக்கப்படும், "என்கிறார் படைகளின் ஆண்டவர். மீண்டும் உரத்த குரலில் இவ்வாறு அறிவிப்பாயாக் படைகளின் ஆண்டவர் அறிவிப்பது இதுவே் என் நகர்கள் சீரும் சிறப்புமாய் இருக்கும். ஆண்டவர் சீயோனை மீண்டும் தேற்றுவார் எருசலேமைத் திரும்பவும் தேர்ந்து கொள்வார்.

**பதில்பாடல் :** இதோ நம் கடவுள் ஆற்றலுடன் வருகின்றார்.

## நற்செய்தி : லூக்கா 1 : 26 - 38

அக்காலத்தில் ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வான தூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா. வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். வானதூதர் அவரைப் பார்த்து, "மரியா, அஞ்சவேண்டாம் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது" என்றார். அதற்கு மரியா வானதூதரிடம், "இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!" என்றார். வானதூதர் அவரிடம், "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" என்றார். பின்னர் மரியா, "நான் ஆண்டவரின் அடிமை உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றார். அப்பொழுது வானதூதர் அவரை விட்டு அகன்றார்.

**தியானம்:** அன்னை மரியா கீழ்படிதலுக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு என்று சொன்னால் அது மிகையாகாது. எவ்வாறெனில், வானதூதர் கபிரியேல் மரியாவுக்கு தோன்றி "மரியா, இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். " என்று (லூக் 1:31) சொல்கின்ற போது மரியா தொடக்கத்தில் தயங்குகிறாள். ஆனால் வானதூதர் எல்லாவற்றையும் விளக்கி சொன்ன பிறகு "நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் " என்று இறைவனின் மீட்புத்திட்டத்திற்கு கீழ்படிந்து தன்னையே முற்றிலுமாக கையளிக்கிறார். பழைய ஏவாள் ஆண்டவர் கொடுத்த கட்டளையான "விலக்கப்பட்ட மரத்தின் கனியை உண்ணக்கூடாது " என்பதற்கு கீழ்படிய வில்லை, அவள் பாம்பின் பசப்பு மொழியில் மயங்கி, விலக்கப்பட்ட கனியை உண்டு ஆண்டவர் கொடுத்த கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனாள் .அதனால் பாவம் இந்த உலகில் நுழைந்தது. ஆனால் புதிய ஏவாளாகிய மரியா ஆண்டவரின் கட்டளைக்கு கீழ்படிந்து நடந்தாள். அதனால் இந்த மண்ணுலகிற்கு மீட்பு உண் டாக காரணமாக இருந்தாள். நாம். கடவுளின் கட்டளைக்கு கீழ்படிந்து நடக்கின்றோமா? என்று சிந்தித்து பார்க்க வேண்டும். ஆகையால் நாம் அன்னை மரியாவைப் போன்று இறைவனுக்குக் கீழ்படிந்து நடக்கின்ற போது இறைவனின் தயவு நமக்கு உண்டு என்பது உறுதி.